**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 183/2017**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியத்தேவர் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கொடிக்குறிச்சி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 25.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான், எனது மனைவி மற்றும் எனது 5 வயது கைக்குழந்தை ஆகியோர்கள் இருசக்கரவாகனத்தில் வாசுதேவநல்லூரில் ஒரு திருமணத்திற்கு சென்று விட்டு கொடிக்குறிச்சி நோக்கி வந்து கொண்டிருந்தோம். மதியம் சுமார் 12.30 மணியளவில் கடையநல்லூர் அட்டைக்குளம் அருகில் நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது, அரசு பேருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நார்மல் ஸ்பீடில் வந்து கொண்டிருந்தது.

கண் இமைக்கும் நேரத்தில் எனக்கு முன்பு இருசக்கரவாகனத்தில் சென்ற கேரளாவைச் சேர்ந்த 2 நபர்கள் மீது மோதியதில் அந்த இருசக்கரவாகனம் எங்கள் வண்டியின் மீது மோதி, நாங்கள் அனைவரும் கீழே விழுந்து விட்டோம். எனக்கு உடல் முழுவதும் ஊமைக்காயம்

ஏற்பட்டது. எனது மனைவிக்கு வலது காலிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டது. எனது குழந்தைக்கு வலது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. கேரளாவைச் சேர்ந்த சித்திக் என்ற பையனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு, தலையிலிருந்து இரத்தம் வந்தது, அவர் தலையில் தலைக்கவசம் அணிந்திருந்தார். கேரளாவைச் சேர்ந்த தாமஸ் என்பவருக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. சித்திக் சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார்.

காயம்பட்ட என்னையும், எனது மனைவி மற்றும் குழந்தையையும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் தென்காசி அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன். அந்த அரசு பேருந்தை ஆஜர் எதிரி தான் ஓட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.25 18:16:40 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 183/2017**
**வழக்கு சாட்சி PW–2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகத்தாய் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகத்தேவர் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கொடிக்குறிச்சி | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 25.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கணேசன் எனது கணவர். எதிரியை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான், எனது கணவர் மற்றும் எனது 5 வயது குழந்தை ஆகியோர்கள் இருசக்கரவாகனத்தில் வாசுதேவநல்லூருக்கு ஒரு திருமண வீட்டிற்கு சென்று விட்டு கொடிக்குறிச்சிக்கு திரும்ப வரும்போது மதியம் சுமார் 12.00, 12.30 மணியளவில் கடையநல்லூர் அட்டைக்குளம் அருகில் நாங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி போகும்போது எதிரே வந்த அரசுபேருந்து எங்களுக்கு முன்னால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்ற கேரளாவைச் சேர்ந்த 2 பேர்கள் இருசக்கரவாகனத்தில் சென்றபோது, அவர்கள் மீது மோதி அவர்கள் எங்கள் வண்டியின் மீது மோதி விட்டார்கள். நாங்கள் கீழே விழுந்து விட்டோம்.

விபத்தில் எனக்கு வலது காலிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டது. எனது கணவருக்கு முகத்தில் ஊமைக்காயம் ஏற்பட்டது. எனது குழந்தைக்கு முகத்தில் கோரை, கோரையாக காயம் ஏற்பட்டது. கேரளாவைச் சேர்ந்த ஒரு பையனுக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். கேரளாவைச் சேர்ந்த மற்றொரு பையனுக்கு உடல் முழுவதும் ஊமைக்காயம் ஏற்பட்டது. அவருக்கு மேல் கால் முழுவதும் கோரை, கோரையாக காயங்கள் இருந்தது. காயம்பட்ட நான், எனது கணவர், எனது மகள் ஆகியோர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து விட்டு, அதன் பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்றோம். தென்காசி அரசு மருத்துவமனையில் நாங்கள் ஒரு வாரம் சிகிச்சை பெற்றோம். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.25 18:16:49 +0530